# உங்கள் பனையோலைகள் மின்வெளிக்கு வந்துவிட்டனவா?

[காகித நூற்கள் மின்னூற்களாக்கப்படவேண்டிய தேவை குறித்த சிறு உரையாடல்]

"ஏடுகளில் இருந்த தமிழ் எழுத்துப்பிரதிகள் காகித அச்சில் வெளிவரத் தொடங்கியமை தமிழ்ச் சூழலில் நிகழ்ந்த பெரிய திருப்பம். வரலாற்று ஓட்டத்தில் முக்கியமிக்க மாற்றம். அவ்வாறு மாற்றங் காணாத ஏட்டுப்பிரதிகள் இன்று பயனெதுவுமற்று அழிந்துபோய்விட்டன. காகித அச்சிலிருந்து அடுத்த நிலைமாற்றத்தை நீங்கள் தொடர்புபடும் எழுத்துப்பிரதிகள் எட்டிவிட்டனவா? உங்கள் எழுத்துப்பிரதிகள், மின் ஆவணங்களாக்கப்பட்டு மின்வெளியில் அணுகப்படக்கூடியனவாக இருக்கின்றனவா? இன்னமும் மாற்றங்காணவில்லையானால், அவை காகிதத்தில் ஏறாத ஏடுகளின் இன்றைய நிலையை ஒருகாலத்தில் அடையக்கூடும்"

## நூலகம் திட்டம்

மின்னூலாக்கத்திற்கான இலாபநோக்கற்ற திறந்த தன்னார்வக் கூட்டுழைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) **அளிப்புரிமை:**

இக்கையேட்டின் உரைப்பகுதிகள் அனைத்தும் கட்டற்ற ஆவண உரிமத்தின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.
**இவற்றை இதே அளிப்புரிமையுடன் பயன்படுத்த, நகலெடுக்க, திருத்த, அச்சிட, விநியோகிக்க அனைவருக்கும் உரிமை உண்டு.**

http://www.gnu.org/copyleft/fdl.html

Permission is granted to copy, distribute and/or modify this document under the terms of the GNU Free Documentation License, Version 1.2 or any later version published by the Free Software Foundation

**எழுத்தாக்கம்:**

மு.மயூரன், தி.கோபிநாத்.

**13 - 01 – 2007**

**நூலகம் திட்டத்துடனான தொடர்புகளுக்கு:**

**தி.கோபிநாத்** - 0112 321869 - kopinath@gmail.com
**மு.மயூரன்** - 078 514 1948 - mmauran@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"நவீன தமிழ் இலக்கியத்தில் எமக்குரிய மிகப்பெரிய பிரச்சினை என்னவென்றால் இப்பொழுது இருக்கின்ற மாணவர்களுக்கும் இனிவரவிருக்கின்ற மாணவர்களுக்கும் இந்த மூல நூற்களை எல்லாம் மிகச்சுலபமாக அவர்களுடைய பார்வைக்கு அவர்களுடைய வாசிப்புக்கு கொண்டுவரவேண்டும். எனவே யாராவது ஒருவர் இந்த மறுமலர்ச்சி சஞ்சிகைகளை, சிறுகதைகளை கொண்டுவந்ததுபோல முழுச்சஞ்சிகைகளையும் மீளலுருவில் நூறு பிரதி அல்லது நூற்றைம்பது பிரதிகளாவது அந்த 24 இதழ்களையும் ஒன்றாகச் சேர்த்து மறுமலர்ச்சிக் கொத்தாக ஆக்கி... .... கொணரமுடியுமேயானால் அது ஒரு முக்கியமான விடயமாக இருக்கும்"**

**-பேராசிரியர் கா.சிவத்தம்பி - ஞானம் - ஜனவரி 2007**

மறுமலர்ச்சி மட்டுமல்ல கலைச்செல்வி, அலை, புதுசு, கவிஞன், வியூகம், நோக்கு, விவேகி போன்ற அநேக சஞ்சிகைகளின் ஓரிரு இதழ்களை நீங்கள் வீட்டிலிருந்தபடியே இணையத்தில் மின்வடிவில் இன்று பார்வையிடமுடியும். மிக மிக இலகுவாக.

பேராசிரியரின் கருத்துப்படி நூறு அல்லது நூற்றைம்பது பிரதிகள் மிகச்சிறந்த ஆவணமாக வருங்கால மாணவர்களுக்கு உதவும்தான். ஆனால் அந்த நூற்றைம்பது அச்சுப்பிரதிகளுக்கு அவற்றுக்கே உரித்தான எல்லைகள் உண்டு.

மிஞ்சிமிஞ்சிப் போனால் இந்தப் பிரதிகள் ஒரு சில நூலகங்களைச் சென்றடையலாம். சிலபேரால் கொள்வனவு செய்யப்பட்டு வீடுகளில் வைத்திருக்கப்படலாம். பத்து ஆண்டுகளுக்குப் பிறகு மறுமலர்ச்சியில் வெளிவந்த ஒரு கட்டுரை தொடர்பான பொருட்பரப்பைத் தேடும் ஒரு மாணவரை, அல்லது மறுமலர்ச்சி இதழொன்றையே தேடும் ஆர்வலரை இந்தத்தொகுப்பு எவ்வளவு இலகுவாக, எவ்வளவு விரைவாகச் சென்றடையும்?

பேரினவாதத்தால் எரியூட்டப்பட எமது நூற்கள் எத்தனை? செல்லரித்துப்போன எமது நூற்கள் எத்தனை? தேடிப்பெற இலகுவான வழியெதுவுமற்று நூலகங்களில் தேங்கிக்கிடப்பன எத்தனை? இடத்துக்கிடம் இலகுவாகக் கொண்டுசெல்லப்பட முடியாதனவாய் மிக மெதுவாகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறப்படத்தக்கனவாய் இருப்பவை எத்தனை? அச்சிடப்பட்ட பிரதிகள் தீர்ந்துபோன நிலையில் இன்றைக்கு பெறப்படவே முடியாதனவாய் போய்விட்ட பிரதிகள் எத்தனை?

எல்லாவற்றையும் தாண்டி, அச்சில்தானே வெளிவந்தது மறுமலர்ச்சி? அவற்றின் இதழ்கள் எங்கே? அவற்றுக்கு என்ன நடந்தது? அன்றைய மறுமலர்ச்சி இதழ்களின் இன்றைய நிலையைத்தானே இன்றைய அச்சுப்பிரதிகள் நாளைக்கு அடையப்போகின்றன?

---

**== 2 ==**

இப்படியொரு நிலையைக் கற்பனை பண்ணிப் பார்ப்போம்.

இந்த உலகின் ஏதோவொரு நாட்டின் எங்கோ ஒரு மூலையில் நீங்கள் இருக்கிறீர்கள்.

உங்களுக்கு மறுமலர்ச்சி இதழொன்று தேவைப்படுகிறது. உங்கள் வீட்டுக்கணினியின் முன்னாலோ அல்லது அருகிலுள்ள நூலகம் ஒன்றின் இணைய இணைப்புப்பெற்ற கணினிக்கு முன்பாகவோ வந்தமர்கிறீர்கள். இணையத் தேடுபொறி ஒன்றில் "மறுமலர்ச்சி" என்று தமிழில் தட்டெழுதி, தேடப்பணிக்கிறீர்கள். ஒரு சில செக்கன்களில் ஒரு நீண்ட பட்டியலை அது உங்கள் முன் தருகிறது.

அதில் ஒன்று "மறுமலர்ச்சி - தொகுப்பு - நூலகம் வலைத்தளம்" என்று நூலகம் வலைத்தளத்திலுள்ள மறுமலர்ச்சி இதழ்த்தொகுப்பின் மின் வடிவத்துக்கான தொடுப்பை தருகிறது.

அத்தொடுப்பினைச் சொடுக்கி மறுமலர்ச்சியின் இதழ்களைக் கணினியில் இருந்தபடியே மின் ஆவணமாகப் பார்வையிடுகிறீர்கள். வேண்டிய குறிப்புக்களை எடுத்துக்கொள்கிறீர்கள்.

இதே இதழ் தேவைப்பட்ட கனடாவில் வசிக்கும் உங்கள் நண்பிக்கு அவரது ஆய்வுக்கு உதவும் வகையில் நீங்கள் கண்டுபிடித்த வலைத்தளத்தின் முகவரியை மின்னஞ்சல் செய்கிறீர்கள். அடுத்த பத்தாவது நிமிடத்தில், தான் தேவையான இதழ்களைப் பார்வையிட்டதாகவும் அதற்கு நன்றி தெரிவித்தும் அவரிடமிருந்து பதிலஞ்சல் வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியொரு நிலையை நாம் எட்டிவிட்டால் எப்படி இருக்கும்?

எப்போது நாம் இந்த நிலையை எட்டப்போகிறோம்?

இது ஒன்றும் சில ஆண்டுகளுக்குப் பிறகு நாம் எட்டப்போகும் நிலையல்ல. இங்கே குறிப்பிடப்பட்ட அனைத்தையும் இன்றைக்கே இப்பொழுதே நீங்கள் இணையத்தில் செய்யலாம். விடயம் தெரிந்தவர்களால் மின்வடிவாக்கப்பட்ட எமது ஏராளம் புத்தகங்கள், சஞ்சிகைகள் இணையத்தில் உள்ளன.

இப்பொழுது நாம் கற்பனை செய்யச்சொன்ன செயற்பாட்டை இன்றைய இணையத்தமிழ் பயனர்கள் அன்றாடம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

உங்கள் நூற்கள், நீங்கள் தொடர்புபடும் சஞ்சிகைகள் இவ்வாறு மின்வடிவாக்கப்பட்டிருக்காவிட்டால் அவை எதிர்காலத்தில் ஒரு முகவரியிழந்த நிலையையே அடையப்போகின்றன.

அதற்கான முழுப்பொறுப்பும் உங்களுடையதே.

== 3 ==

இந்த வினைத்திறன்தான்; பரிமாறலில், இடத்துக்கிடம் கொண்டுசெல்லப்படுதலில், தேடிப்பெறத்தக்க வழிமுறைகளில் மின் ஆவணங்கள் கொண்டிருக்கும் இத்தகு வேகம்தான் இன்றைய தகவற் தொழிநுட்ப யுகத்தில் நிகழ்ந்த பெரும் புரட்சி.

மின்வடிவில், மின்வெளியில் வைத்திருக்கப்படும் இந்த நூற்களுக்கு அழிவில்லை. அவற்றை எந்தப் பேரினவாதப் பெருநெருப்பும் அண்டிவிடமுடியாது. கடல் கொள்ளமுடியாது.

இந்த உலகின் அல்லது வேறேதாவது ஒரு கோளின் எந்த மூலையில் நீங்கள் இருதாலும்சரி. இணைய இணைப்பும் ஒரு கணிப்பொறியும் மட்டும் இருந்தால் போதுமானது. நீங்கள் தேவையான மின்னூற்களை மிக மிக இலகுவாக தமிழிலேயே தேடிப்பெற்றுக்கொள்ள முடியும்.

பல நூறாயிரம் பேர் ஒரே நேரத்தில் இந்த மின்னூலை படிக்கமுடியும். பிரதிகள் தீர்ந்துவிடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த நட்ட நடுச்சாமத்திலும் நீங்கள் உசாவல் செய்ய முடியும். இணைய நூலகங்கள் இரவில் பூட்டப்பட்டிருக்காது.

எந்தப்பெரிய நூலினையும் ஓர் இணைய முகவரியாக நண்பர்களுக்குச் செக்கன்களில் அனுப்பிவைத்துவிடமுடியும். பொதியஞ்சற் கட்டணங்களோ, தாமதங்களோ கிடையாது.

அடுத்த தடவை நீங்கள் தேடும்போதும் அந்த நூல் அதே இடத்தில் அதே முகவரியில் இருக்கும். யாரும் எடுத்துக்கொண்டு போய்விட்டிருக்கமாட்டார்கள். அல்லது பக்கங்களைக் கிழித்துக் களவாடிவிட்டிருக்க மாட்டார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக நூலிலுள்ள ஒரு சொல்லை அல்லது ஒரு சொற்றொடரைக் கணப்பொழுதில் நீங்கள் தேடிப்பெற்றுவிட முடியும். பக்கம் பக்கமாகத் தட்டத்தேவையில்லை.

நூற்களை எங்கே வைத்திருப்பது என்ற பெருங்கேள்வியை ஈழத்தமிழர்கள் இனியும் எதிர்கொள்ளத் தேவையில்லை. மின்வெளியில் மிகவும் பாதுகாப்பாக உங்கள் நூற்களை வைத்திருக்கலாம்.

ஒற்றை இறுவட்டில் இத்தகைய நூற்களை எல்லாம் சேகரித்து சேமித்து பெரும் நூலகத்தையே நீங்கள் உங்கள் கைக்குள் அடக்கக்கூடிய காலம் வந்தாகிவிட்டது.

---

**== 4 ==**

இவ்வாறாகத் தமிழ் நூற்களை மின்வடிவில் இணையத்தில் வைத்திருப்பதை நோக்கமாகக்கொண்டு சில வலைத்தளங்களும் செயற்றிட்டங்களும் இணையத்தில் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன.

தமிழ்நாட்டை சார்ந்து இயங்கும் மதுரைத்திட்டம், சென்னை நூலகம் போன்றனவும் ஈழத்து நூற்களுக்கென ஆரம்பிக்கப்பட்டு 250 நூற்களையும் 60 சஞ்சிகைகளையும் தொட்டு வளர்ந்துவரும் நூலகம் திட்டமும் நல்ல எடுத்துக்காட்டுகள்.

மதுரைத்திட்டம் மிக முக்கியமான பழந்தமிழ் நூற்கள் அனைத்தையுமே கொண்டிருக்கிறது. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரு திருமுறைகள், பாரதி பாடல்கள் போன்ற 250 நூற்களை தன்னகத்தே இணைய வெளியில் வைத்திருக்கிறது.

நூலகம் திட்டம் ஈழத்து எழுத்தாளர்களுக்கானது. அரிய நூற்கள் முதல் அண்மையில் வெளிவந்த நூற்கள் வரை வாசிக்க, உசாத்துணைக்கு, ஆய்வுத் தேவைகளுக்கு எனப் பலதரப்பட்ட நூற்களைக் கொண்டிருக்கிறது.
.
இவற்றில் நவீன நூற்கள் யாவும் பெரும்பாலும் எழுத்தாளரின் அனுமதி பெற்று எழுத்தாளரின் ஆதரவுடனேயே வலையேற்றப்படுகின்றன. மின்வடிவாக்கலிலும், அனுமதி வழங்கலிலும் ஆர்வம் காட்டாத எழுத்தாளர்களின் நூற்களை இத்திட்டங்கள் கொண்டிருப்பதற்கான வாய்ப்பு மிக மிகக் குறைவே.

இந்த ஆர்வப்போதாமையே பல எழுத்தாளர்கள் நாளை இணைய உலகில் காணமற் போய்விடுவதற்கான வாய்ப்புக்களை உருவாக்குகிறது.

== 5 ==

இதுதான் எதிர்காலம் என்பது இப்பொழுது உங்களுக்கு மிகத்தெளிவாகவே புரிந்திருக்கும்.

ஏடுகளிலிருந்து அச்சுப்பிரதிக்கு மாறியமைக்குச் சமமான அல்லது அதைவிடப் பெரிய பாய்ச்சலை இந்தக் கால மாற்றம் செய்துவிட்டிருக்கிறது என்தை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள்.

கூடவே மின்வடிவில் மாற்றப்படாவிட்டால் உங்கள் நூற்கள் நாளை இந்த உலகின் எங்கோவோர் மூலையில் யாரும் காணாமல் தேங்கிப் போய்விடக்கூடும் என்பதையும் முகவரியிழந்து போகும் என்பதையும் ஒப்புக்கொள்வீர்கள்.

நாங்கள் ஒரு காலமாற்றத்தின் சந்தியில் வாழ்கிறோம். திருக்கோணமலை த. கனகசுந்தரம்பிள்ளை, ஆறுமுகநாவலர், சி. வை. தாமோதரம்பிள்ளை, உ. வே. சா. நின்ற இடத்தில் நிற்கிறோம். எம் முன்னே பெரும் பணி காத்திருக்கிறது.

எமது நூற்களை, ஆவணங்களை மின்வடிவில் மாற்றி இணையத்தில் ஏற்றி அடுத்த தலைமுறைக்கு கொண்டு சேர்க்கவேண்டிய பெரும் பொறுப்பு எமதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவே ஏடுகளை அச்சிலேற்றி எமக்கு கிடைக்கச்செய்த பெரியார்களுக்கு எமது தலைமுறை செய்யக்கூடிய நன்றிக்கடன். ஏற்கனவே வெளிவந்த எமது நூற்களை படிப்படியாக நாம் மின்வடிவாக்கவேண்டும். இனி வரும் நூற்களை மின்வடிவில் இணையத்திலும் வெளியிடவேண்டும்.

ஒருவரோ இருவரோ செய்யக்கூடிய அளவில் இந்தப்பணி இல்லை.

ஒவ்வொரு எழுத்தாளரும் தான் சம்பந்தப்பட்ட நூற்களை மின்வடிவாக்கத் தொடங்கினால் இப்பெரும்பணி மிக இலகுவாக நிறைவேறும்.

இதனை எப்படி செய்வது? மின்வடிவாக்குவது அத்தனை இலகுவானதா?

சரி, நான் ஓர் எழுத்தாளர். கணினி பரிச்சயம் எனக்கு மிகவும் மட்டுப்பாடானது. எனது நூற்களை மின்வடிவாக்கி இணையத்தில் வைத்திருக்க நான் என்ன செய்ய வேண்டும்?

---

**== 6 ==**

இந்தக் கேள்வியை மட்டும் நீங்கள் கேட்டுவிட்டீர்களானால், உங்கள் நூற்களை மின்னூலாக்கி இணையத்தில் வைத்திருக்க நீங்கள் விரும்பிவிட்டீர்களானால், உங்கள் நூற்களை மின்னூலாக்குவதற்குத் தேவையான வேலையின் பெரும்பகுதியை நீங்கள் செய்துவிட்டிருப்பீர்கள்.

மின்னூற்கள், அவற்றை இணையத்தில் வைத்திருப்பதில் கிடைக்கும் பயன் குறித்த புறக்கணிப்பு அல்லது அக்கறையின்மையே இப்பணியின் முன்னாலுள்ள பெருந்தடை.

மற்றைய அனைத்தும் மிக இலகுவான வழிமுறைகளால் செய்துவிடப்படத்தக்கதே.

அண்மையில், கணினி முறையில் அச்சிடும் அச்சகம் ஒன்றில் உங்கள் நூலினை நீங்கள் பதிப்பித்திருப்பீர்களானால், உங்கள் நூல் மின் ஆவணமாக்கப்பட்ட பின்னரே அச்சுக்கு அனுப்பப்பட்டிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அச்சகத்தில் தட்டச்சு செய்யப்பட்டு ஏறத்தாழ மின்வடிவாக்கப்பட்ட உங்கள் நூல், அக்கறையின்மை காரணமாக அச்சகக் கணினிகளில் கவனிப்பாரற்று கிடந்து அழிந்துபோன கதையை நீங்கள் அறிவீர்களா?**

நீங்கள் இப்போது செய்யவேண்டியது என்ன?

**==7==**

எழுதாளரான நீங்கள், இன்றைய மின்வெளி எழுத்துக்கள் பற்றிய யதார்த்தத்தினை உணர்ந்துகொள்ளவேண்டும்.

சில புலம்பெயர் எழுத்தாளர்களும் பல இந்திய எழுத்தாளர்களும் இன்று இணையத்தில் எழுத ஆரம்பித்துவிட்டார்கள். வலைப்பதிவுகளிலும் திண்ணைபோன்ற இணைய சஞ்சிகைகளிலும் ஏராளமான எழுத்தாளர்கள் எழுதத்தொடங்கிவிட்டார்கள்.

உயிர்மை, காலச்சுவடு, தீராநதி போன்ற சஞ்சிகைகளின் இதழ்கள் இணையத்திலும் வெளிவருகின்றன.

இணையத்தில் எழுதாத எழுத்தாளர்கள் அடுத்த தலைமுறை வாசர்களை சென்றடைய முடியாத நிலைக்கு போய்விடலாம்.

Google போன்ற இணையத் தேடுபொறி ஒன்றில் "ஜெயமோகன்" என்றோ "எஸ்.பொன்னுத்துரை" என்றோ தேடினால் ஏராளமான வலைப்பக்கங்களில் அவர்களது எழுத்துக்களும் நூற்களும் பட்டியலிடப்படுகின்றன.

ஆய்வுக்காக தேடுபவர்களை இந்தப்பக்கங்களே இலகுவாக சென்றடையும். அடுத்த தலைமுறை புலம்பெயர் மாணவர் ஒருவர் இணையத்தை அடிப்படையாகக்கொண்டே ஆய்வுகளை செய்யப்போகிறார். நூலொன்றை தேடி பயணங்கள் செய்யவும் அலைந்து திரியவும் அவர் எவ்வளவு தூரம் முயலக்கூடும் என்பது சிந்திக்கப்படவேண்டியது.

இந்த யதார்த்தத்தை நீங்கள் புரிந்துகொள்வீர்கள்.
நீங்கள் இணையத்தில் எழுதுவதற்கு பல தடைகள் இருக்கலாம்.

ஆனால் உங்கள் நூலொன்று இணையத்தில் கிடைக்கத்தக்கதாக இருப்பது அவ்வளவு சிக்கலானதல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு உதவுவதற்கென்றே நூலகம் போன்ற திட்டங்கள் இருக்கின்றன. ஆகக்குறைந்தது இவ்வறான வழிகளில் இணையத்தில் உங்கள் படைப்புக்களை தேடப்படத்தக்கதாக இடம்பெறச்செய்வது உங்களுக்கும் நாளைய தலைமுறைக்கும் மிகவும் பயன்தரத்தக்கது.

---

== 8 ==

மிக எளிய படிமுறைகளூடாக உங்கள் முன்னாலுள்ள பணியை விளக்கலாம்.

1. உங்கள் நூற்கள் மின்வடிவாக்கப்படவேண்டிய தேவையை உணருங்கள். அதற்கான ஆர்வத்தைக் கொண்டிருங்கள்.

2. உங்கள் நூலை அச்சிட்ட அச்சகத்திலிருந்து நூலின் தட்டச்சுச் செய்யப்பட்ட மின்பிரதியை இறுவட்டு (CD) ஒன்றில் எழுதி கவனமாக வாங்கி வைத்துக்கொள்ளுங்கள். தட்டச்சு செய்வதற்கும் சேர்த்தே நீங்கள் அவர்களுக்கு பணம் கொடுக்கிறீர்கள். உங்கள் நூலை இறுவட்டில் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளும் முழு உரிமையும் உங்களுக்கு உண்டு.

3. உங்கள் நூல் பல காலங்களுக்கு முன்னர் அச்சிடப்பட்டிருந்தாலோ, அல்லது மின் பிரதியை அச்சகத்திலிருந்து பெற முடியாமற்போனாலோ நூலினை மீளவும் தட்டச்சுச் செய்வதற்கான முயற்சிகளைச் செய்யுங்கள். தட்டெழுதக்கூடிய உங்கள் நண்பர் ஒருவர் மூலமாகவோ அல்லது அச்சகம் ஒன்றில் பணம் கொடுத்தோ அல்லது நீங்களாகவேயோ இதனைச் செய்துகொள்ளலாம்.

நேரடியாக ஒருங்குறியை (Unicode) பயன்படுத்தி தட்டச்சுச் செய்வது மிகவும் விரும்பத்தக்கது.

அடுத்துவரும் படிகளை செய்வதற்கு உங்களது கணினிப்பரிச்சயம் போதுமானதாக இல்லாவிட்டால் உங்களுக்கு தெரிந்த, கணினிப்பரிச்சயம் கொண்ட மாணவர் ஒருவரின் அல்லது நண்பரொருவரின் உதவியைப் பெற்றுக்கொள்ளுங்கள். இது முடியாவிட்டாலும்கூட பரவாயில்லை. நூலகம் மின்னூல் திட்டத்திற்கு நீங்கள் இறுவட்டில் வைத்திருக்கும் மின்வடிவத்தை அனுப்பிவையுங்கள். அங்கிருக்கும் ஆர்வலர்கள் மின்னூலக்கத்தை உங்களுக்காகச் செய்துதரக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அந்த இலாப நோக்கற்ற தன்னார்வத் திட்டத்தின் உறுப்பினர்களது வேலைப்பளு மிக அதிகமானது மிகுதிப்படிகளையும் நீங்களே செய்துகொண்டால் அவர்களுக்கு மிகப்பெரிய உதவியாக அமையும். அந்த தன்னார்வ கூட்டுழைப்பில் நீங்களும் பங்குபற்றும் வாய்ப்பும் கிடைக்கும்.

4. இறுவட்டில் நீங்கள் பெற்றுக்கொண்டிருக்கும் மின்வடிவம் ஒரு Adobe Pagemaker அல்லது publisher கோப்பாக இருக்கலாம். நூல் ஏதாவதொரு எழுத்துருவை பயன்படுத்தி தட்டச்சு செய்யப்பட்டிருக்கலாம். முதலில் அதிலுள்ள உரைப்பகுதிகள் அனைத்தையும் நகல் செய்து word போன்ற செயலி ஒன்றில் சேமித்து வைத்துக்கொள்ளுங்கள்.

5. suratha.com/reader.htm என்ற இணைய முகவரியில் ஓர் எழுத்துரு மாற்றி இருக்கிறது. அங்கிருக்கும் அறிவுறித்தல்களைப் பின்பற்றி, அதனைப் பயன்படுத்தி நீங்கள் சேமித்து வைத்திருக்கும் உரைப்பகுதிகள் அனைத்தையும் ஒருங்குறிக்கு (Unicode) மாற்றிக்கொள்ளுங்கள். ஒருங்குறியில் அமைந்த மின் ஆவணங்களே மிக வினைத்திறன் மிக்கவை. ஏராளமான வசதிகளை கொண்டிருப்பவை.

6. ஒருங்குறிக்கு மற்றப்பட்ட உரைப்பகுதியினை நகலெடுத்து இன்னுமொரு wordpad கோப்பாக அல்லது அதைப்போன்ற உரை ஆவணமொன்றாகச் சேமித்துக் கொள்ளுங்கள்.

7. ஒருங்குறியில் சேமிக்கப்பட்டிருக்கும் உங்கள் நூலினை முழுமையாக, கவனமாக மெய்ப்புப்பாருங்கள். வேண்டிய மாற்றங்களை செய்யுங்கள். மிக நேர்த்தியாக கணினியில் வாசிக்கத்தக்க நூலாக அதனை சீர்படுத்துங்கள்.

8. இப்போது உங்களிடம் இருப்பதுதான் மின்னூல். அதனை பிரதிபண்ணிக் கவனமாக உங்கள் தனிப்பட தேவைகளுக்குச் சேமித்துக்கொள்ளுங்கள்.

9. நீங்கள் செய்துவைத்திருக்கும் மின்னூலினை, நூலகம் திட்டத்துக்கு அனுப்பிவையுங்கள். எப்படி அனுப்புவது? பின்னிணைப்பை பார்க்க..

அவ்வளவுதான்!

உங்கள் பனையோலைகள் இப்போது இணையமேறிவிட்டன!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னிணைப்பு: நூலகம் திட்டம்

நூலகம் திட்டம் என்றால் என்ன?

ஈழத்துக்கான தனியான ஒரு மின்னூற் திட்டமாகத் "திருக்கோணமலையின் வரலாறு" என்ற நூலின் மின்வடிவதோடு 2005 தை தொடங்கப்பட்ட நூலகம் திட்டம். பத்மநாப ஐயரின் வழிகாட்டலில் மு.மயூரன், தி.கோபிநாத், பிரதீபா தில்லைநாதன் (கனடா), பு. ஈழநாதன் (சிங்கப்பூர்) ஆகிய ஆரம்ப உறுப்பினர்ளின் பங்கு பற்றுதலுட.ன் வளர்ந்து இன்று சுமார் 25 தன்னார்வலர்களின் பங்குபற்றுதலோடு உலகளாவிய அளவில் முன்னெடுக்கப்பட்டு 250 நூற்களையும் 60 சஞ்சிகைகளையும் எட்டித் தொடர்ந்ந்து வளர்ந்ந்து வருகிறது

இது ஒரு திறந்த, இலாபநோக்கற்ற தன்னார்வக் கூட்டுழைப்பு.

ஓர் இணையத்தளமும், அது தொடர்பான உரையாடல்களுக்கான ஒரு மடலாடற்குழுவுமே நூலகம் திட்டம். இவை அனைத்தும் மின்வெளியில் நிகழ்வன. இத்திட்டம் தனியாக எவருக்கும் உரிமையானதல்ல. எந்த விதமான இலாபமீட்டலையும் இது செய்வதில்லை. ஈழத்து நூற்களை மின்னூலாக்குவதில் ஆர்வமுள்ள பலரும் மடலாடற்குழு ஒன்றின் மூலம் இணைந்து இந்தத் திட்டத்தினை மேற்பார்வை செய்கிறார்கள். நிர்வாகப்பணியினை இத்தன்னார்வலர்கள் தமக்குள் தெரிவுசெய்ப்படும் ஒருவரிடம் கையளிக்கிறார்கள். தற்போது இப்பணி தி. கோபிநாத் அவர்களிடமிருக்கிறது. எவர் வேண்டுமானாலும் இக்குழுவில் இணைந்துகொள்ளலாம். எந்தத் தடையும் இல்லை. தன்னார்வலர்களின் நன்கொடைகளைக்கொண்டே வழங்கி போன்ற பராமரிப்புச் செலவுகள் ஈடுகட்டப்படுகிறது.

ஈழத்து மின்னூற்கள் இத்திட்டத்தின் வலைத்தளத்தில் நேர்த்தியாக பட்டியலிடப்பட்டு வைத்திருக்கப்பட்டுள்ளன. எவரும் வந்து நூற்களை படிக்கமுடியும். உசாத்துணைக்கு பயன்படுத்த முடியும். எந்தவிதமான கட்டுப்பாடுகளும் கிடையாது.

தமிழில் சமகால அறிவு மிகப்பெருமளவில் பகிரப்பட்டுள்ள மிக முக்கிய வலைத்தளங்களில் ஒன்றாக மிகக் குறுகிய காலத்தில் நூலகம் வளர்ச்சி பெற்றுள்ளது. இரண்டாண்டுகளில் 300 க்கும் அதிகமான மின்னூல்கள் இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளன. இவை இலக்கிய நூல்கள், உசாத்துணை நூல்கள், அரிதான நூல்கள் எனப் பலதரப்பட்டவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைலாயமாலை, வையாபாடல், பிள்ளையார் கதை, மட்டக்களப்பு மான்மியம், கதிரைமலைப்பள்ளு, பறாளை விநாயகர் பள்ளு போன்ற ஈழத்தின் முன்னோடி நூல்களும் அபிதான கோசம், யாழ்ப்பாணச் சரித்திரம், கனகி புராணம் போன்ற அரிய நூல்களும் நூலகத்தில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

ஏ. ஜே. கனகரட்னா, மு. தளையசிங்கம், வ. அ. இராசரத்தினம், சு. வில்வரத்தினம், வரதர், கே. கணேஷ், சொக்கன், மஹாகவி, நீலாவணன், சில்லையூர் செல்வராசன், சி. வி. வேலுப்பிள்ளை, அப்துல் காதர் லெப்பை, எஸ். பொ., அ. முத்துலிங்கம், தி. ஞானசேகரன், என். கே. மகாலிங்கம், செங்கை ஆழியான், சாந்தன், செழியன், சி. சிவசேகரம், அ. இரவி, செம்பியன் செல்வன், எம். ஏ. நுஃமான், , சோலைக்கிளி, தா. பாலகணேசன், சேரன், மு. புஷ்பராஜன், மைதிலி, இரா. சிவச்சந்திரன், இ. பாலசுந்தரம், வி. என். எஸ். உதயசந்திரன், நட்சத்திரன் செவ்விந்தியன், அனார், அ. பாலமனோகரன், கோவிந்தன், இ. தியாகலிங்கம், எஸ்.எல்.எம். ஹனீபா, எம். ஏ. ரஹ்மான், கோவிலூர் செல்வராஜன், சபா ஜெயராசா, சாரணா கையூம், பாமா. ராஜகோபால், தா. இராமலிங்கம், கா. சிவத்தம்பி, நா. சுப்பிரமணியம், வி. சிவசாமி, அ. யேசுராசா, அருள் செல்வநாயகம், அ. சிவராஜா, செ. யோகராசா, க. நடனசபாபதி, நிலாந்தன், பொ. இரகுபதி, என். ஆத்மா, வாசுதேவன், முருகையன், மு. பொன்னம்பலம், சுல்பிகா, பா. அகிலன், ஜபார், கி. முரளிதரன், சி. மௌனகுரு, மௌ. சித்திரலேகா, கி. பி. அரவிந்தன், ரஞ்சகுமார், க. சட்டநாதன், நந்தி, வ. ஐ. ச. ஜெயபாலன், எம்.கே.எம். ஷகீப், இளைய அப்துல்லா, கோப்பாய் சிவம், க.சி. குலரத்தினம், சி.கா. செந்திவேல், கனக செந்திநாதன், சுவிஸ் ரவி, நெல்லை க. பேரன், அ. செ. முருகானந்தம், அநு. வை. நாகராஜன், அருணா செல்லத்துரை உள்ளிட்ட பெருமளவு எழுத்தாளர்களின் நூல்கள் நூலகம் திட்டத்தில் உள்ளன.

இ. பத்மநாப ஐயர் இத்திட்டத்தின் மூத்த உறுப்பினராகவும் ஆலோசகராகவும் இருந்து பங்களித்துவருகிறார். அவரது உதவியாலேயே ஏராளமான நூற்கள் நூலகம் திட்டத்திற்கு கொண்டுவரப்பட்டது.

ஆயினும் பல முக்கிய எழுத்தாளர்களின் நூல்களும் முக்கியமான நூல்களும் இதுவரை ஆவணப்படுத்தப்படவில்லை என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதே. இது ஒரு தன்னார்வக் கூட்டு முயற்சியாதலால் நூலகத்தில் நூல்களை ஆவணப்படுத்த விரும்பும் எழுத்தாளர்கள், ஆர்வலர்கள் மின்னூல்களைத் தயாரித்துப் பங்களிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகத்தில் ஒரு நூல் இணைக்கப்படுவததாயின் அது

- ஈழத்தவருடையதாக அல்லது ஈழம் தொடபானதாக இருக்க வேண்டும்.
- நூலாசிரியரின் அல்லது பதிப்புரிமையாளரின் அனுமதி பெறப்பட்டிருக்க வேண்டும்.

இங்கே அனுமதி மின்னூலாக இணையத்தில் வெளியிடுவதற்கானது மாத்திரமே ஆகும்.

பின்வரும் மாதிரி ஒப்புதலை அளிப்பதன் மூலம் நூலகம் திட்டத்தின் வினைத்திறனான செயற்பாட்டுக்கு எழுத்தாளர்கள் ஒத்துழைப்பதுடன் ஈழத்தின் முக்கிய கூட்டு முயற்சியொன்றின் பங்காளராகலாம். இதுவரை உங்கள் நூல் ஆவணப்பட்டிருக்காவிடினும் எதிர்காலத்தில் ஆர்வமுள்ள தன்னார்வலர்களால் உங்கள் நூற்கள் மின்னூலாக்கப்படுவதை உங்கள் அனுமதி தூண்டி நிற்கும்..

அனுப்புவதற்கான முகவரிகள்

- T. Kopinath, 90/3, New Chetty Street, Colombo-13
- R. Pathmanaba Iyer, 27-B, High Street, Plaistow, London E13 0AD
- P. Eelanathan, Blk 811 #07-207, Tampines Ave, Singapore 520811

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலகம் திட்டத்துக்கான மின்னூல் அனுமதி

________________________________________ஆகிய நான்,

1. இணையத்தில் மின்னூற்களாக மட்டுமே வெளியிடலாம்.
2. மின்னூற்கள் எக்காலத்திலும் எவ்வித வணிக நோக்கிலும் பயன்படுத்தப்படக் கூடாது.

ஆகிய நிபந்தனைகளின் கீழ் நான் எழுதிய/ எனது பதிப்புரிமையுள்ள

- ☐ சகல நூற்களையும்
- ☐ வெளியாகி .... ஆண்டுகள் கடந்த சகல நூற்களையும்
- ☐ கீழ்க்குறிப்பிடும் நூற்களை மட்டும் (பொருத்தமானதைத் தெரிக)

இணையத்தில் மின்னூற்களாக வெளியிட அனுமதியளிக்கிறேன்.

| # | நூல் | பதிப்பு |
|---|---|---|
| 1. | .............................. | ............. |
| 2. | .............................. | ............. |
| 3. | .............................. | ............. |
| 4. | .............................. | ............. |
| 5. | .............................. | ............. |

..............      ................

ஒப்பம்      திகதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம்
www.noolaham.net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org